உ

சிவமயம்.







சிருங்ககிரி,

ஸ்ரீமதபிநவ வித்யாதீர்தத யதீந்திரர் தோத்திரப் பாமாலை. (குறிப்புரை)

ஸ்ரீ சிதம்பரத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ கோயிலூர்,
ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல ஞானதேசிக சுவாமி அவர்களின்
மடாலய வெளியீடு.

[விலை அணா 3.

சிவமயம்.



சிருங்ககிரி

ஸ்ரீமத் பிநவ வித்யா தீர்த்த

பாரதீ யதீந்திர சுவாமிகள்.

உ

சிவமயம்.







சிருங்ககிரி,

ஸ்ரீமதபிநவ வித்யாதீர்த்த யதீந்திரர் தோத்திரப் பாமாலை. (குறிப்புரை)

ஸ்ரீ சிதம்பரத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ கோயிலூர்,
ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல ஞானதேசிக சுவாமி அவர்களின்
மடாலய வெளியீடு.

[விலை அணா 3.

உ

தேவி ஸ்துதி.

(1) **வித்தைதிரு மேனியளாய்ப் பணிந்தோ ரச்சம்**
விலக்கிநலம் பலபொருள்பாக் கியங்கள் வெற்றி
நத்தினவர்க் கருளியணி யழகங் கங்கள்
நன்குநிறைந் திருக்காதி வடிவா யுண்மைத்
தத்துவத்தி லிகலோக பரலோ கத்திற் ௨
சார்ந்தபல விதசுகத்திற் பொருந்த வேத
தத்துவத்தைப் பகவதியா ரருளல் வேண்டுஞ்
சங்கரா சாரியரி னடைவி னாலே.

(குறிப்புரை.)

பாக்கியம்= அதிர்ஷ்டம் (புண்ணியம்) மேனியளாய் விலக்கியருளி நிறைந்து வடிவாய் அருளல் வேண்டும் என எச்ச முடிபு நோக்குக.

பகவதியார், வேத தத்துவத்தை, இகலோக பரலோகத்திற் சார்ந்த பலவித சுகத்தில் உண்மைத் தத்துவத்திற் பொருந்த அருளல் வேண்டும் என ஓட்டுக.

வேதம், கர்மம் உபாசனை ஞானம் என்னும் காண்டத்திரய வடிவமா யிருத்தலின் அவற்றிற்குப் பொருட் பொருத்தமுற இவ்வாறு கூறினர். தத்துவம் = பொருள், அடைவினால் = வாயிலாக, (திருவுள்ளத்திலும் திருவாக்கிலும் திருமேனியிலுமிருந்து).
வரும் செய்யுளிலுள்ள அடைவால் என்பதற்கும் இதுவே பொருள்.
(க)

(2) நலம்பெறு பரம வளந்தரு செயலா
னன்மகிழ் வெய்தியுள் ளிதய
தலஞ்செறி பொருளாய்ச் சுககன நிறைவாஞ்
சாரதை நமக்குமெய் யுணர்வாற்
புலந்தெறு குரவர் வித்தியா தீர்த்த
புங்கவ ரபிநவ ரடைவா
லலம்பெற வுயிர்க்கு யோகபூ மியைநன்
கடைவுறச் செய்திடல் வேண்டும்.

(கு - ரை.) நலம்பெறு பரம வளந்தரு செயலானன் மகிழ்வெய்தி நமக்கு மெய்யுணர்வால் உள்ளிதய தலஞ்செறி பொருளாய்ச் சுககன நிறைவாஞ் சாரதை, மெய்யுணர்வாற் புலந்தெறு குரவர் வித்தியாதீர்த்த புங்கவரபிநவ ரடைவால் உயிர்க்கு அலம்பெற யோகபூமியை நன்கடைவுறச் செய்திடல் வேண்டும்; என, பதத்தை மேலுங் கீழும் கொண்டு கூட்டி, அன்னுவயஞ் செய்க. அலம்=அமைதி (சாந்தி). (உ)

ஸ்ரீமதாசார்ய சுவாமிகள் துதி.

(3) உண்மையறி வானந்த வுருவ மாகி
யோங்காரப் பொருளான பிரம மாகி
யெண்மையின் ஞா னுயிருத வான்மா வாகி
யெல்லாவின் பமுஞ்செய்யும் புருட னாகித்
தண்மையொடு சத்தாமாத் திரமா யார்க்குஞ்
சன்மார்க்கந் தனையுணர்த்திச் சுயமி லங்கி
யொண்மைசெறி சங்கரா சார்ய ரிந்த
வுலகமெலா நிறைந்ததனைக் காத்தல் வேண்டும்.

(கு-ரை.) எண்மையின்மை=ஸத்யத்வம், தண்மை= குளிர்மை,(ஸௌட்ரஸந்நத்வம்) சன்மார்க்கந்தனை யுணர்த்துதல் = ஸம்ப்ரணேத்ருத்வம், ஒண்மை = ஒளியுடைமை, (சிரேட்டத்வம்). (௩)

(4) ஈங்குரையீங் காரபரப் பிரம மாகி
யிணையிலா ஞானமய ரசவான் மாவாய்த்
தாங்கியுல கனைத்துமுழு துணர்ந்து சொர்க்கந்
தரணிபுவர் விபூதிமுழுச் சத்தி மேவித்
தேங்குநல விஞ்ஞானக் கல்வி சாரந் ௫
திகழ்த்தியுருத் திராய்மங் களஞ்செய் மேலாம்
பாங்குசெறி சங்கரா சார்ய ரிந்தப்
பார்முழுது நிறைந்ததனைக் காத்தல் வேண்டும்.

(கு-ரை.) உரை = ஸ்வரவடிவமான, ஈங்கார = ஈங்காரத்தின், பர = தாற்பரியப் பொருளாயுள்ள, சொர்க்கம் தரணி புவர் விபூதி=சொர்க்கலோக பூலோக புவர்லோகங்களாகிய ஐசுவரியத்தொடு, தேங்குநல விஞ்ஞானக் கல்வி சாரம்=நிறைந்த ஆனந்தத்தைத் தோற்று

விப்பதான விஞ்ஞான வடிவ வித்யாசாரத்தை, திகழ்த்தி= தோன்றச்செய்து, (உலகுக்கு அநுக்கிரகஞ் செய்கின்றவ ராய்) மேலாம் பாங்கு செறி = சிரேட்டத்துவம் பொருந்திய,. (ச)

(5) ஆதரஞ்செய் திருவுடைச்சர் வேச னாகி
யயனொடிவ ரெங்குநிறை பரேச னாகிப்
பூதமுத லுலகுணர்சம் ராட்டாய் மிக்க ௭
புவிக்குயிராய்ச் சார்வபௌம னாகத் தோன்றி
வேததரு மத்தொடுசத் வித்தை ஞான
விஞ்ஞானங் கட்கிரவி பூமா வாவர்
போதமருள் சங்கரா சார்ய ரிந்தப்
புவனமெலா நிறைந்ததனைக் காத்தல் வேண்டும்

(கு-ரை.) ஆசாரிய சுவாமிகளை யுணர்த்துவதாகிய இவரென்னும் சுட்டுமொழி, ஆவரென்னும் பயனிலை கொண்டது. பூதம் முதல்=இறப்பு எதிர்வு நிகழ்வென்

னும் முக்காலங்களோடு, சய்ராட் = தேவதா விசேஷம், மிக்க என்பதை ஆதரத்துக்கு அடையாகக் கூட்டுக. வேத தருமங்களாவன — சத்தியம் சௌசம் தயை தானம் முதலிய பொதுத் தருமங்களும், அக்கினி ஹோத்திர முதலிய சிறப்புத் தருமங்களுமாம். சத்வித்தை = சத் ஸ்வபாவமுள்ள வேதாந்த சித்தமான பரமேசுர ஞானம், (சகுணப்ரஹ்ம சாக்ஷாத்காரம்) ஞானம் = நூலுணர்ச்சி, விஞ்ஞானம் = அனுபவ உணர்ச்சி, (நிர்குணப்ரமஹ் சாக்ஷாத்காரம்) பூமா=வியாபகப் பொருள். (௫)

(௬) தருமநெருப் பன்னநீர் வித்தை கீர்த்தி
தங்கமர தனஞ்சகல பூதஞ் சாதி
தருமவனுட் டானமுள வறவோர் செல்வந்
தகுபுலவ ரறிஞரொடு சார்ந்து நன்றாய்த்
தருமநிலை பெறுவித்து வெற்றி யின்பஞ்
சங்கரா சாரியர்செய் தருளி வேத
தருமமொடு ஸ்ரீவித்தை சுகமே லோங்கத்
தரணியின்ப மோங்கநெடி திருத்தல் வேண்டும்.

(சூ-ரை) தகுபுலவர் = தகுதியான நூலறிவுடையோர், அறிஞர் = சாராசாரங்களைப் பகுத்துணர்வோர், ஸ்ரீவித்தை = தேவி மந்திரமும் சக்கரமும் என இரு பிரிவுடைத்து. இங்கு ஆகுபெயரால் ஸ்ரீவித்தையைச் சொல்லும் சந்த்ரகலா வித்யாஷ்டகம் என்னும் தேவி ஆகமத்தைக் குறித்து நின்றது. அவ்வஷ்டகமாவன:- சந்த்ரகலா, ஜ்யோத்ஸ்னாவதீ, கலாநிதி, குலார்ணவம், குலேச்வரீ, புவனேச்வரீ, பார்ஹஸ்பத்யம், தூர்வாஸமதம் என்னு மிவையாம். இவ்விரிவு ஸௌந்தர்யலஹரி 31-வது சுலோகத்தின் வியாக்கியானத்திலுள்ளது. சுகம் = ஜீவன்முத்திச்சுகம் தரணியின்பம் சுவர்க்க இன்பத்துக்கு உபலக்ஷணம். (சூ)

(7) செல்வநிலம் பசுவேதம் தவம்பி ரக்ஞை
சிரத்தையறம் குரவர்சனக் கூட்டந் தேவர்
கல்வியிரு பிறப்பாளர் ஞான யோகங்
கடவுளறி வோடுபகுத் தறிவு சித்திச்
செல்வமொடும் பல்வகைநல் வளங்க ளோடுஞ்
செறிந்திறையாய் விரிந்தபுகழ் புரிந்து மெய்ம்மைச்

சொல்வரஞ்செய் சங்கரா சார்ய ரிந்து
சுடருள்ள வரையுலகங் காத்தல் வேண்டும்.

(கு-ரை.) சித்தி=அணிமாதி, மெய்ம்மைச் சொல்வரஞ் செய்தல்=தத்வோபதேசஞ் செய்தல், மெய்ம்மைச்சொல் வரஞ் செய்கின்ற அதனுல் என்னும் பொருள்பட நிற்ப தால் மெய்ம்மைச் சொல்வரஞ் செய் என்றது ஏதுகர்ப்ப விசேடணம். (எ)

(8) பொன்னுலகாள் பவன்மழையைப் பொழிக நாளும் ௭
பூமிவிரும் பியவாறு விளைக கோக்கள்
நன்னயமாம் பால்கொடுக்க வுலக மூய்ய
நம்பகவான் சங்கரா சார்ய ராற்றல்
மன்னியெலா மறிந்துபிர சாஸ்தா வாகி
மாபுவிக்கன் புயர்வீடு போக நல்கத்
துன்னியமா சமர்த்துடைய ராகி மிக்க
சுகநலஞ்செய் பவராகித் தோன்றல் வேண்டும்.

(கு-ரை.) பொன்னுலகாள்பவன் = இந்திரன். ப்ரசாஸ்தா=தருமாதி புருஷார்த்தங்களைப் பிரஜைகளுக்குக் கட்டளையிடுவோர். (அ)

(9) முழுதுயிர்க்குந் தஞ்சுகஞ்செய் பிரம நிட்டர்
முதல்வரிவர் சங்கரா சார்ய ரிங்கெப்
பொழுதுமறுஞ் சௌசன்யங் கல்வி யுள்ளார்
போற்றுநயிட் டிகர்சாது சனங்க ளுக்குப்
பழுதில்வீ டாவர்சன சுகதநி லன்பு
பற்றினவர் பாதமலர் சிரமேற் கொண்டு [டைத்
தொழுதுதொண்ட னேன்றமிழிற் றொடுக்கும் பாட்
தொடையாக விறைவரங்கீ கரித்தல் வேண்டும்.

(கு-ரை.) இங்கு முதல் நயிட்டிகர் வரை ஒரு வாக்கியம். சௌசன்யம் = ஸௌஜனத்தன்மை (நன்மக்களியல்பு). நயிட்டிகர் = மரணபரியந்தம் பிரஹ்மசரிய விரதமுடையவர். பழுதில் வீடு=சொந்த வீடு. தொடை= மாலை. (கூ)

துதியை மாலையாக வுருவகித்தல்.

(10) எங்குநிறை குருவருளா லியற்றியவிப் பாமாலை
சங்கரதே சிகனடியிற் சமர்ப்பித்த வென்றலைய
தங்களிய பிரமசுதை ததும்புமறை நிலைவுடைய
இங்கென்மனத் தலர்ந்தவாக் கென்னுமலர் மல்லிகைய.

(கு-ரை) பாமாலை பால்பகா அஃறிணைப் பெயராக லின் குறிப்புப் பன்மைவினை முடிபு கொண்டன. தங்களிய = இந்தத் துதியிலே முயன்று அமைந்துள்ள படிப் போர் கேட்போருடைய கரணங்களாகிய வண்டுகளை யுடையன. (கO)

துதியின் சமாப்தி,

(11) குருவருள் கூடுதற்குக் கூறியசொற் சேவை
சுருதியுரை யென்னத் துணி.

(கு-ரை.) சொற்சேவை = வாக்கு வழிபாடானது, சுருதியுரை = சுருதி வாக்கியத்தி னுரைவடிவமாம். சுருதி ஆகுபெயர். (கக)

ஸ்ரீமதபிநவ வித்யாதீர்த்த யதீந்திரர் தோத்திரப் பாமாலை முற்றிற்று.

சுபம்.

11

முதற்குறிப்பு வெண்பா.

வித்தைநல முண்மையீங் காதரநெஞ் சேதரு
மத்தொடுசெல் வம்பொன் முழுதெங்கை—நித்தியம்
பத்தியாற் பாரா யணஞ்செய் பதமருளும்
வித்தியா தீர்த்தாத்ம வித்து.

இது மனத்தை நோக்கி விவேகம் கூறுவதாக அடியார் ஒருவர் செய்தது.

அருளிறை வணக்கம்.

துச்சக் குகையா மைங்கோசத்
துன்ப வுருவின் மறைந்திருந்த
புச்சப் பொருளீ தெனக்காட்டும்
புரணா னந்தப் பழம்பொருளே
யச்சப் பிறவி மரணமெனு
மாழி கடக்க வேழைதனக்
கிச்சை யின்றி யருளுருவா
யெழுந்தே யொளிரு மரக்கலமே.

பாண்டியன் அச்சகம், சிதம்பரம். '54

உ

சிவமயம்.

சிருங்ககிரி

ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த பாரதி சுவாமிகள் வணக்கம்

எழுசீர்விருத்தம்.

உத்தம கைலை மலைக்கிறை யவனு
 றுமையொரு பாகமே முதலா
மெத்திய வடிவை மறைத்துல குணர்வு
 மேவமா நுடவுருப் புனைந்தே
சத்திய தவத்தோர் சார்ந்திடுஞ் சிருங்கை
 தனில்வள ரபிநவ பதஞ்சேர்
சுத்தமெய்ஞ் ஞான வித்தியா தீர்த்த
 தூயமா தவன்பதந் தொழுவாம்.

இஃது
திருவண்ணாமலை ஈசானிய மடம்
ஸ்ரீ நடேச ஞானதேசிக சுவாமியவர்களால்
இயற்றப்பட்டது.

உ சிவமயம்.



ஸ்ரீ நடேசஞான தேசிகர்.